# முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

அசல் வழக்கு எண். இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ந் தேதி 2ம் பிரதிவாதி தரப்பு சாட்சி **பி.வா.சா.3**-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.ஜானகி, பலகை எழுத்தர்(பொறுப்பு) என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுபாகர் | ஜாதி | : | |
| த/பெ | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| மாவட்டம் | : | | வயது | : | |

**பி.வா.சா.3: முதல் விசாரணை**:

நான் ஈரோடு யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா வங்கி கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். S. முத்துவேல் என்பவர் எங்களது வங்கியில் கணக்கு வைத்துள்ளார். அவருடைய வங்கி கணக்கு எண்.379102010112840 ஆகும். 22.10.2018 முதல் 21.04.2025 வரையிலான மேற்படி வங்கிக்கணக்கின் கணக்கு பட்டியலின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் எங்களது வங்கியில் வீட்டுக்கடன் வாங்கியுள்ளார்.

மேற்படி கடன் கணக்கு எண்.379106650027628 ஆகும். 14.11.2018 முதல் 21.04.2025 வரையிலான மேற்படி கடன்கணக்கின் கணக்கு பட்டியலின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முத்துவேல் எங்களது வங்கியில் 14.11.2018ம் தேதி வீட்டுக்கடனாக ரூ.23 லட்சம் வாங்கியுள்ளார். மேற்படி சமயத்தில் அவரால் எழுதிக் கொடுக்கப்பட்ட வீட்டுக்கடன் ஒப்பந்தம், கடனுறுதி சீட்டு, Letter of continuity, Interest agreement, Letter of gurantee ஆகிய ஆவணங்களின் உண்மை நகல் தாக்கல் செய்யப்படுகிறது. அது **சா.சாஆ.3 கோர்வையாக** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முத்துவேலால் எங்களது வங்கிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட MOD பத்திரத்தின் உண்மை நகல் தாக்கல் செய்யப்படுகிறது. அது **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பி.வா.சா.3: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**:

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.